**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 28** **நாள்: 20.01.2022**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில் இன்று (20.01.2022) நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைகள், பாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, போன்ற வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில் இன்று (20.01.2022) ரிப்பன் கட்டட கூட்டரங்கில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள்**, ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்ட சென்னை வெள்ள நீர் மேலாண்மை குழுவின் அறிவுரைகள் மற்றும் அதன் தொடர்ச்சியாக மாநகராட்சியின் சார்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில் திருத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பொதுமக்களுக்கான சேவைகளை கணினி மயமாக்குதல், கோவளம் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைத்தல், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பயோ மைனிங் திட்டத்தை செயல்படுத்துதல், மாநகரின் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த மூன்று முக்கியமான பகுதிகளில் மேம்பாலங்கள் அமைத்தல் போன்ற அறிவிப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், இப்பணிகளை விரைந்து தொடங்க தேவையான நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக்கோரிக்கை விவாதத்தின்போது பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டப்பணிகள் குறித்து வெளியிட்ட அறிவிப்புகளான நமக்கு நாமே திட்டம், நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டம், சிங்காரச் சென்னை2.0, சாலைகள் மற்றும் நடை பாதைகளை சீரமைத்தல், பட்டினப்பாக்கம் லூப் சாலையில் நவீன மீன் அங்காடி அமைத்தல், பழுதடைந்த மழைநீர் வடிகால்களை சீரமைத்தல், வடசென்னை கடப்பாக்கம் ஏரி புனரமைப்பு பணி, சென்னையில் உள்ள 25 நீர்நிலைகளை புனரமைத்தல், சென்னை மாநகராட்சி பள்ளிகளின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், 10 மயான பூமிகளை மேம்படுத்துதல், வரலாற்று சிறப்புமிக்க விக்டோரியா மஹாலை புதுப்பித்தல் மற்றும் மாநகரை பசுமையுடன் பராமரிக்க 2.5 லட்சம் மரக்கன்றுகள் நடுதல் போன்ற அறிவிப்புகள் குறித்த தற்போதைய நிலை மற்றும்

முன்னேற்றம் குறித்து இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அனைத்து திட்டங்களையும் விரைந்து முடிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி இந்த ஆய்வின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், அரசின் சார்பில் ஏற்கனவே நமக்கு நாமே திட்டம், சிங்காரச் சென்னை 2.0, சாலைகள் சீரமைப்பு, மூன்று முக்கிய பகுதிகளில் மேம்பாலங்கள் அமைத்தல், பூங்காக்களை புனரமைத்தல், மயான பூமியை சீரமைத்தல், பள்ளி கட்டிடங்களை புனரமைத்தல் போன்ற பல்வேறு பணிகளுக்கான அரசாணையும், நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டு ஒரு சில பணிகளுக்கு ஒப்பம் கோரப்பட்டு பணிகளும் நடைபெற்று வருகின்றன. அரசாணை வெளியிடப்பட்டுள்ள திட்டங்களுக்கு விரைந்து ஒப்பம் கோரவும், தொடங்கப்பட்டுள்ள பணிகளை விரைந்து முடிக்கவும் அலுவலர்களுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்கள் உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள், அரசு முதன்மைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர்கள் திரு.எம்.எஸ்.பிரசாந்த், இ.ஆ.ப., (பணிகள்) அவர்கள், திரு. விஷு மஹாஜன், இ.ஆ.ப., (வ.ம.நி) அவர்கள், டாக்டர் எஸ்.மனிஷ், இ.ஆ.ப., (சுகாதாரம்) அவர்கள், திருமதி டி.சினேகா, இ.ஆ.ப., (கல்வி) அவர்கள், திரு. சிம்ரன்ஜீத் சிங் காஹ்லோன், இ.ஆ.ப., (தெற்கு வட்டாரம்) அவர்கள், திரு.ஷேக் அப்துல் ரஹ்மான், இ.ஆ.ப., (மத்திய வட்டாரம்) அவர்கள், திரு.மா.சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., (வடக்கு வட்டாரம்) அவர்கள், தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள், மண்டல நல அலுவலர்கள் மற்றும் மண்டல மருத்துவ அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**